# மனிதம் மரித்து

காரை செ. சுந்தரம்பிள்ளை

யுத்தம் என்னும் அக்கினிப் பிசாசு
பொருளாதாரத்தைப் பொசுக்கு கின்றது
நாட்டினைப் பற்று நம்மவர்க் கில்லை
ஆதலால் நாடு அழிந்தே விட்டது
நெருப்பைப் பிழிந்து நீரை எடுத்து
அமுதம் படைப்போம் என்பவராலே
எல்லாம் நடக்குது
இனிமேல் நடக்க என்ன இருக்குது

பொரித்த அரிசியைப் புழுதியில் வீசி
விளைவு செய்ய எண்ணுகின்றோரும்
தறித்த வேம்பைத் தரையில் நாட்டி
துளிர்க்க வைக்கத் துணிகின்றோரும்
கறந்த பாலை மடியில் ஏற்றி
கன்றுக்கு ஊட்டக் கருதுகின்றோரும்
வாழ்வதானாலே வரட்சி மிஞ்சி
பாழ் நிலமாகி பயனற்றுப் போன
பூமியை நினைத்தால் புலம்பத் தோன்றும்

விட்ட பிழையைத் திருத்திட எண்ணார்
பட்ட அநுபவம் பற்றியும் நினையார்
பதவி வெறியும் பந்த பாசமும்
அதிகாரத் துடிப்பும் அடக்கு முறையும்
ஒன்றே வழியென ஓராது சென்றோர்
நாசமாகிய வரலாறு தன்னை
நம்மவர் ஏனோ உணர்ந்திட வில்லை

உண்மை நிலையை உணராது மாந்தர்
பேசாதிருந்து பிணமாகிப் போனால்
ஏசாதோ இவ்வுலகம்
இன்றோ
அனாதையானது அஹிம்சா தர்மம்
மனிதம் மரித்து மாதங்கள் அல்ல
வருடங்கள் பலபல
உருண்டோடி விட்டன
புனிதம், தர்மம் என்றெல்லாம் புரந்தி
புண்ணியம் என்ன காண்பரோ அறியோம்.